# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தம்)

***(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே அவர்களால் 2024, ஒகத்து மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2024, ஒகத்து மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***291 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தம்)

# (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அத்தியாயம் 129 இன் 18ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்*

***2.*** (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 18ஆ ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (இ) மற்றும் (ஈ) ஆகிய பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) கர்ப்பத்தின் முதல் இருபத்தி எட்டு வாரங்களில் கருச்சிதைவு ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்; மற்றும்

(ஈ) சட்டபூர்வ அல்லது மருத்துவ காரணங்களின்கீழ் கருக்கலைப்பு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், கருக்கலைப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***3.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.